***<u>தேதி.05.12.2019                    சி.சி.47/2017</u>***

***<u>அ.சா.1 - திரு.முருகன் (PW1)சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்)</u>***

*நான் அரியலூர் சரக கூட்டுறவு சங்க துணை பதிவாளராக 01.12.2004 முதல் 22.03.2007 வரை பணியாற்றியுள்ளேன். 81 பிரிவு விசாரணை அதிகாரியை எந்த தேதியில் நியமித்தேன் என்றால் நான் பணியில் சேர்வதற்கு முதல் நாள் 30.11.2004-ம் தேதி எனக்கு முன்பு பணியாற்றிய கந்தையா என்பவர் திரு.ராஜாசுவாமிநாதனை நியமனம் செய்திருக்கிறார். விசாரணை அதிகாரி விசாரணையை முடித்து எந்த தேதியில் என்னிடம் ஒப்படைத்தார் என்றால் 30.04.2005-ம் தேதியில் அறிக்கையை ஒப்படைத்தார். எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றசாட்டுகள் சம்மந்தப்பட்ட குற்றங்கள் அனைத்து 1999 முதல் 2002 வரை உள்ள காலத்தில் நடந்து. என்னிடம் இவ்வழக்கில் தனிநபர்கள் யாரும் விசாரணை அதிகாரி நியமிக்கப்படுவதற்கு முன்பாக புகார் ஏதுவும் கொடுக்கவில்லை. எதிரிகள் கையாடால் செய்யப்பட்டதாக சொல்லும் தொகையை திரும்ப செலுத்தி விட்டார்கள் என்றால் நான் இருக்கும்வரை செலுத்தவில்லை. பின்னிட்டு செலுத்தி விட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. விசாரணை அதிகாரி அறிக்கையின் அடிப்படையில் நான் எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை 30.08.2005 என்று ஞாபகம். எனது புகாருக்கு முதல் தகவல் அறிக்கையின் நகல் எனக்கு கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள் எந்த தேதியில் கொடுத்தார்கள் என்றால் எனக்கு நினைவு இல்லை. நான் பணியில் இருக்கும்போது முதல் தகவல் அறிக்கை நகல் பெற்றேன். நான் அவ்வாறு நகல் பெறவில்லை என்றும் பெற்றுவிட்டதாக பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் 30.04.2010-ம் தேதியின் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அந்த சமயத்தில் நான் இங்கு பணியில் இல்லை எனக்கு தெரியாது. விசாரணை அறிக்கை விவரங்களை சரியாக தெரிந்து கொள்ளாமல் தவறாக புகார் கொடுத்து விட்டேன் என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்த பிறகு போலீசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.*